GODependence
True freedom is being dependent on God

# செய்தி மடல்

செப்டம்பர் 2025



## மூன்று தோட்டங்கள் – நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?

**பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். (வெளிப்படுத்தல் 22:1-3)**

பரிசுத்த வேதாகமத்தின் ஆரம்பத்தின் ஒரு தோட்டத்தைக் காண்கிறோம். முடிவிலும் ஒரு தோட்டத்தைக் காண்கிறோம். முதலாவது நாம் காண்பது மனிதன் இழந்துபோன பரதீசு ஆகும் (ஆதி.2:15). கடைசியாக நாம் காண்பது மனிதன் திரும்பப் பெற்றுக் கொண்ட பரதீசு ஆகும் (வெளிப்படுத்தல் 22). இந்த இரண்டு தோட்டங்களுக்கும் நடுவே, மூன்றாவதொரு தோட்டம் வருகிறது, அது கெத்செமனேதோட்டம் ஆகும் (மத்தேயு 26:36). கெத்செமனே தோட்டத்தின் சொல்ல முடியாத கசப்பு மற்றும் பாழான நிலையின் மூலமாகவே நாம் "ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி" பாய்ந்தோடும் மகிமையான தோட்டத்தை மறுபடியும் கண்டுகொள்கிறோம். கெத்செமனே இல்லையெனில், புதிய எருசலேம் இல்லை. கெத்செமனே தோட்டத்தின் மறைவான மற்றும் புரிந்துகொள்ள முடியாத அந்த இரவு இல்லையெனில், நித்தியமான நம்பிக்கையின் ஆசீர்வாதமான அருணோதயம் இல்லை.

நாம் தேவனுடைய குமாரனுடைய மரணத்தினாலே அவருடனே நாம் ஒப்புரவாக்கப்பட்டோம். நாம் நம் மீட்பைக் குறித்து சாதாரணமானதாகக் கருதும் அபாயத்தில் எப்பொழுதும் இருக்கிறோம். அதை அற்பமானதாகக் கருதுகிறோம். பாக்கியமானவைகள் மிக எளிதாக நமக்கு வரவேண்டிய உரிமைகளாகக் கருதப்படும் இடத்திற்கு வந்து, நமக்கு வரவேண்டியவை எனக் கருதப்பட்டு பெறப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. "கெத்செமனேயை நான் மறக்க முடியுமா?" ஆம், நான் மறக்கக் கூடும். அந்த மறதியில் நான் என் மீட்பின் பரிசுத்தமான பயபக்தியை இழந்துவிடுகிறேன். மேலும் "திரும்பப் பெற்ற பரதீசின்" உண்மையான மகிமையை நான் தவற விட்டுவிடுகிறேன்.

"நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே." இவ்வசனம் நாம் மனத்தாழ்மையுடன் இருக்கவும், "நான் யாருடையவன்," நான் யாரைச் சேவிக்கவேண்டும் என்ற நினைவுடன் அவரைப் பற்றிய அன்பினால் நம் மனதை நிரப்பவும் உதவுகிறது.

**(ஜான் ஹென்றி ஜோவெட் எழுதிய தினசரி தியான நூலிருந்து எடுக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது)**

### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

**பரிசுத்த வேதாகமத்தை வாசித்து, தியானிக்கும்போது, நம் உள்ளான மனிதனுக்கான ஆவிக்குரிய ஆரோக்கியத்தையும் பலத்தையும் நாம் பெறுகிறோம். இது தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிவதற்கு நம்மை பலப்படுத்துகிறது. - வாரன் வியர்ஸ்பி**

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த GODependence செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ள தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

மாறிக்கொண்டே இருக்கும் மதிப்பீடுகளும் கணக்கற்ற கவனத்தைச் சிதறல்களும் நிறைந்த இந்த உலகில், கிறிஸ்தவ விசுவாசத்தின் நம்பகத்தன்மைக்கு தெளிவான அடையாளங்களில் ஒன்று அதன் நிலைத்தன்மை (consistency) ஆகும். "நான் விழாமல் இருக்க (இயேசுவை விட்டுப் பின்வாங்காமல் இருக்க) மற்றும் மற்றவர்களுக்கும் உதவி செய்ய நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்ட ஒரு 14 வயது பள்ளிச் சிறுவனுக்கு, சமீபத்தில் இரத்தசாட்சியாக மரித்த சார்லி கிர்க் கூறிய பின்வரும் சவால் நம்மை இன்னும் ஆழமாக சிந்திக்க வைக்கிறது: "ஒவ்வொரு நாளும் பரிசுத்த வேதாகமத்தை வாசி, பரிசுத்த வேதாகமம் செய்யச் சொல்வதைச் செய், பரிசுத்த வேதாகமம் என்ன சொல்கிறது என்று மற்றவர்களிடம் சொல்." இந்தப் பழக்கங்கள் நேர்மையான இருதயத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்போது, அவை நமது தேவனுடனான நடத்தையை ஆழப்படுத்துவது மட்டுமல்லாமல், உலகத்திற்கு ஒரு வல்லமையான சாட்சியாகவும் ஒளிரும்.

**1. ஒவ்வொருநாளும் பரிசுத்த வேதாகமத்தை வாசியுங்கள்:**

பரிசுத்த வேதாகமம் என்பது வெறுமனே ஒரு மத நூல் அல்ல - அது தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தை (எபிரெயர் 4:12). வாழ்க்கை என்பது கவனச் சிதறல்கள், பொறுப்புகள் மற்றும் இரைச்சல்கள் நிறைந்தது, அவை தொடர்ந்து நமக்கு கவனச் சிதறலை உண்டாக்க போட்டியிடுகின்றன. ஆனால் நாம் தினமும் உணவு உண்ணாமல் நம் உடல் வளர முடியாதது போல, தேவனுடைய வார்த்தையில்லாமல் நம் ஆத்துமா வளர முடியாது. "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே" என்று இயேசு கூறினார், (மத்தேயு 4:4). திறந்த இருதயத்துடன் வாசிக்கப்படும் சில வசனங்கள் கூட, அந்த நாளுக்கான ஞானத்தையும், ஊக்கத்தையும், சீர்திருத்தலையும் தர முடியும் (2 தீமோத்தேயு 3:16–17). வாசிக்கும் அளவை விட அதை தொடர்ந்து வாசிப்பதே மிகவும் முக்கியம். காலையின் அமைதியில் இருந்தாலும் சரி, இரவில் ஓய்வு எடுப்பதற்கு முன்பு இருந்தாலும் சரி, ஒவ்வொருநாளும் தேவனுடைய வார்த்தையை திறந்து வாசிப்பதே நிலைத்து நிற்கும் விசுவாசத்தின் வேர்களை வளர்ப்பதற்கான நல்ல வழியாகும்.

**2. பரிசுத்த வேதாகமம் செய்யச் சொல்வதைச் செய்யுங்கள்:**

தேவனுடைய வார்த்தை வாசிப்பதற்காக மட்டுமே உள்ளதல்ல - அது வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படுவதற்காக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்று யாக்கோபு 1:22 நம்மை எச்சரிக்கிறது. "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" இயேசு தாமே கூறினார் (யோவான் 14:15). கீழ்ப்படிதல் சில நேரங்களில் அசௌகரியமாகவோ, நமது பண்பாட்டுக்கு எதிராகவோ, அல்லது விலை உயர்ந்ததாகவும் இருக்கலாம்; ஆனால் அது எல்லா வேளைகளிலும் பலனளிக்கக்கூடியதே. நமது தீர்மானங்கள், உறவுகள் மற்றும் அன்றாட செயல்களில் தேவனுடைய வார்த்தையை நாம் பயன்படுத்தும்போது, நாம் அந்த சத்தியத்தின் ஜீவனுள்ள சாட்சிகளாக மாறுகிறோம். நாம் வாசிப்பதற்கு ஏற்ப நமது வாழ்க்கை இணங்கிச் செல்லும்போது தான் உண்மையான தாக்கம் ஏற்படுகிறது.

**3. பரிசுத்த வேதாகமம் என்ன சொல்கிறது என்று மற்றவர்களிடம் சொல்லுங்கள்:**

நற்செய்தி என்பது நம்மிடமே வைத்துக்கொள்வதற்காக நமக்குக் கொடுக்கப்படவில்லை. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களுக்குக் கொடுத்த மாபெரும் இறுதி கட்டளையானது, நாம் அவருடைய வார்த்தையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள அழைக்கிறது (மத்தேயு 28:19–20). "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று ரோமர் 10:17 நமக்கு நினைவூட்டுகிறது. நாம் தேவனுடைய வார்த்தையை அன்போடும் உறுதியோடும் மற்றவர்களிடம் பேசும்போது, அது நம் இருதயங்களில் விதைகளை நடுகிறது, அதை பரிசுத்த ஆவியானவர் பண்படுத்தி வளர்த்து கொள்ள முடியும். வேதவசனங்களைப் பகிர்வது என்பது பிரசங்கம் செய்வதை எல்லா நேரங்களிலும் குறிக்காது - அது ஊக்கமளிக்கும் ஒரு வசனத்தைப் பேசுவது, ஒரு நண்பருக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்களை விளக்குவது, அல்லது உரையாடலின் போது ஒருவரை இயேசுவின் பக்கம் சுட்டிக்காட்டுவது போன்ற எளிய விஷயங்களாக இருக்கலாம். நாம் தைரியமாகவும் அன்போடும் பரிசுத்த வேதாகமம் கூறுவதை அறிவிக்கும்போது, இருதயங்களை மாற்றவும் அவரது ராஜ்யத்தைக் கட்டவும் நாம் தேவனுடன் இணைந்து பணியாற்றுகிறோம்.

தேவனுடைய வார்த்தையை அனுதினமும் படிக்கவும், பயன்படுத்தவும், பகிரவும் நாம் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு நாளும், நாம் விசுவாசத்தில் வலுப்பெற்று, வேதாகம சத்தியத்தின் தேவை நிறைந்த இந்த உலகில் நாம் பிரகாசமாக ஒளிர்கிறோம். தேவனுடைய வார்த்தையை நம் வாழ்க்கையின் மையத்தில் வைத்திருக்க, இந்த மாதத்தில் புதிதாக அர்ப்பணிப்போம்; ஏனெனில் தேவனுடைய வார்த்தை நம்மில் ஜீவனுள்ளதாக இருக்கும்போது, கிறிஸ்து நம் மூலம் வெளிப்படுகிறார்.

சர்வதேச வேதவாசிப்பு தின (IDBR2025) நடவடிக்கைகளுக்கான திட்டமிடலுக்காக நமது GODependence குழு செப்டம்பர் 7, 2025 அன்று கூடியது. GODependence வேதவாசிப்பு சவால்கள் நடத்தப்படும் அனைத்து 10 மொழிகளிலும், முடிந்தவரை அதிகமான நாடுகளிலும் IDBR நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதை இந்த ஆண்டு எமது நோக்கமாகக் கொண்டுள்ளோம். தயவு செய்து IDBR2025 திட்டங்களுக்காக உங்கள் ஜெபங்களில் தொடர்ந்து நினைவுகொள்ளுங்கள்.

1 மற்றும் 2 ஆகஸ்ட் 2025 அன்று பெங்களூரில் நடைபெற்ற நமது GODependence குழுவின் மூன்றாவது குடும்பக் கூடுகையின் அறிக்கை, மற்றும் GODependence செய்திமடல் கருத்துக்கணிப்பின் முடிவுகள் மற்றும் சிறப்பம்சங்கள் இந்த செய்திமடலில் கொடுக்கப்பட்டுள்ளன. கருத்துக்கணிப்பில் தீவிரமாக பங்கேற்றதற்கு அனைவருக்கும் நன்றி.

GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

நான் உயிரோடிருக்கும் காலமெல்லாம் வருடத்திற்கு ஒருமுறை வேதாகமத்தை வாசிக்க விரும்புகிறேன். - Dr. சாமுவேல் ஜான்சன்



# அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறேனா?

- R.ஸ்டான்லி

இயேசு போல வாழவேண்டும் என்ற அறிவுரை புதிய ஏற்பாட்டில் எங்கும் காணப்பட்டாலும், அவரது ”அடிச்சுவடுகளைப்” பின்பற்றவேண்டுமென்ற குறிப்பான அழைப்பு ஒரே இடத்தில்தான் வருகிறது. அதை எழுதியது இயேசுவின் பாடுமரணத்தின்போது அவரை நெருங்கிக் கவனித்துக்கொண்டிருந்த பேதுருதான். 1 பேதுரு 2:21, ”கிறிஸ்து உங்களுக்காகத் துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்கள் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள், இதற்காகவே அழைக்கப் பட்டுள்ளீர்கள்.” நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க கீழே சில கேள்விகள் தரப்பட்டுள்ளன. அமைதியாகக் கடவுளுக்கு முன் இக்கேள்விகளை வாசித்து நம்மைச் சீர்தூக்கிப்பார்க்க சில மணிநேரம் எடுத்துக்கொள்ளுவோம்.

**1. எனது வேதனைகள் மற்றும் கவலைகளைக் குறித்து எனது நண்பர் அலட்சியமாயிருக்கும்போது நான் எரிச்சலடைகிறேனா?**

கெத்செமனே தோட்டத்தில் இயேசு இரத்த வியர்வை சிந்திக்கொண்டிருக்கும்போது அவருக்கு மிக நெருங்கிய சீடரோ தூங்கச் சென்றுவிட்டனர். திரும்பத் திரும்ப அவர் அவர்களிடம் உதவி கேட்டும் அவரது ஆன்மாவின் ஆழ்துயரத்தில் பங்கேற்க அவர்கள் தவறிவிட்டனர். அவரோ அவர்களிடம் கோபப்படவில்லை. ஜெபத்தில் விழிப்புடனிருக்கவேண்டும் என்று மட்டும் அவர்களுக்கு அறிவுறுத்திவிட்டு, "எழுந்திருங்கள், போகலாம்" என்று சொன்னார்! (மத் 26:36-46).

**2. ஜெபத்தில் ஏனோதானோ என்றிருக்கிறேனா? எனது தோல்விகளுக்குக் காரணம் எனது ஜெபமின்மை என்று உணராமல் மற்றவர்களையும் சூழல்களையும் குற்றஞ்சாட்டுகிறேனா?**

பழிக்கப்பட்டபோதும் துன்புறுத்தப்பட்டபோதும் தெய்வீகக் குணநலன்களைக் கைவிட்டுவிட இயேசுவிற்கு எல்லாவிதத்திலும் சோதனை வந்தது. அவரோ கெத்செமனே தோட்ட ஜெபத்திலேயே பின்னர் வரவிருந்த போராட்டத்திற்கு வெற்றி கண்டுவிட்டார். மாறாக, அவரது சீடரோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரிதாபமாய்த் தோற்றனர். விழிப்புள்ள ஜெபமில்லாது "ஆர்வ மனது" மட்டுமிருந்தால் "வலுவற்ற உடலை" மேற்கொள்ளுவது சாத்தியமல்ல (மாற் 14:35-39).

**3. நான் விரும்பும் வகையிலேயே இறைவன் எனது வேண்டுதலுக்குப் பதில் தரவேண்டுமெனச் சாதிக்கிறேனா? "என் விருப்பப்படியல்ல, உம் விருப்பப்படியே நடக்கட்டும் ஆண்டவரே! எனப் பிரார்த்திக்க நான் பயப்படுகிறேனா?**

அந்தத் துன்பக் கிண்ணத்தில் பருகுவது எவ்வளவு கசப்பு என்றறிந்திருந்த இயேசுவிற்கு அதை முழுமனதோடு ஏற்பது எளிதாயில்லை. அக்கிண்ணம் தம்மை விட்டு அகலட்டும் என்று அவர் விண்ணப்பித்தது உண்மைதான்; ஆனாலும் ஒவ்வொரு முறையும் அவரது வேண்டல், "என் விருப்பமல்ல, உம் விருப்பமே என்றே முடிந்தது (மத் 26:39, 42,44). இத்தகைய அடிபணிதலில் அத்தனையாய் அகங்குளிர்ந்த தந்தையாகிய கடவுள் தமது மகனைப் பலப்படுத்த உடனே விண்ணிலிருந்து ஒரு சிறப்புத் தூதனை அனுப்பிவைத்தார் ( 22:42,43).

**4. எவரது குறையாவது எனக்குத் தெரிந்தால் அதற்காய் ஜெபிப்பதற்குப் பதிலாக அதைப் பகடிப்பண்ணிப் பிரகடனப்படுத்துகிறேனா?**

பேதுருவின் விருப்பத்தைவிட அவனது வலுவின்மை தான் பெரிதாயிருந்தது. இயேசு அவனை முன்னெச்சரித்தது மட்டுமல்ல, அவனுக்காக மனதுருகி வேண்டுதலும் செய்தார். அவனது உடனாளிகளுக்கு அவன் பின்னர் எவ்விதம் பணி செய்வான் என்பதையும் முன்னறிவித்து அவனை உற்சாகப்படுத்தினார் (லூக் 22:31-34).

**5. என்னை யாரோ காட்டிக்கொடுத்துவிட்டால் அந்த நபரை வெறுக்கிறேனா?**

மனிதன் மனிதன்தான் என்பதையும் இறைவன் மட்டுமே 100 சதவீதம் நம்பத் தகுந்தவர் என்பதையும் மறந்துவிடுகிறேனா? யூதாஸ் ஒரு திருடனாயிருந்தும் நம்பிக்கையோடு இயேசு அவனிடம் பணப்பையைக் கொடுத்து வைத்திருந்தார். தனது மனமாற்றத்திற்காய் இயேசு இவ்விதம் கொடுத்த வாய்ப்பை அவன் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஆனாலும், கள்ள முத்தம் கொடுத்து இயேசுவை யூதாஸ் காட்டிக் கொடுத்தபோது அவர் அவனைத் "தோழா" என்றழைத்தார்! (யோ 12:4-6; மத் 26:50).

**6. என் விரோதிகளுக்கு எதிராக உலகுசார்ந்த போராயுதங்களைப் பயன்படுத்துகிறேனா? கடவுள் அனுமதித்ததற்கு மிஞ்சி ஒரு மனிதனும் எனக்கு விரோதமாக ஒன்றும் செய்யமுடியாது என்ற உணர்வு எனக்கு இல்லையா?**



பரிசுத்த வேதாகமத்தை வழிகாட்டியாகக் கொண்ட ஆத்துமாவானது ஒருபோதும் வழிதப்பிப் போக முடியாது. – நெப்போலியன்

மல்குஸ் என்ற வேலைக்காரனின் காதைத் தொட்டு இயேசு சுகப்படுத்தியது பேதுருவின் முரட்டுச் செயலைக் கண்டனம் செய்ததாகும். வாள் வைத்திருந்தாலும் அதைப் பயன்படுத்த மறுப்பதே உண்மையான ஆன்மீகம் (யோ 18:10,11; மத் 26: 51,52). பிலாத்துவைப் பார்த்து இயேசு, "மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என்மேல் எந்த அதிகாரமும் இராது" என்றார் (யோ 19:10,11).

### 7. என்னைப் பாதிக்கும் ஒருவருக்கு நான் புரியும் எதிர்ச்செயல் அவரை உணர்த்துவிக்கிறதா அல்லது தீர்ப்பளித்து ஒதுக்குகிறதா?

பேதுருவைக் குறித்து இயேசு முன்னறிவித்த யாவும் நிகழ்ந்தது. இயேசுவைப் பேதுரு மறுதலித்தது மட்டுமல்ல, சபிக்கவும் செய்தான். இயேசுவை அது எவ்வளவாய்ப் புண்படுத்தியிருக்குமெனச் சிந்தித்துப்பாருங்கள்! ஆனால் அவர் பேதுருவைத் திரும்பப் பார்த்த பார்வையிலுள்ள கனிவும் பரிவுணர்வும் அவனை நொறுக்கி மனம் நொந்து அழச் செய்தது (லூக் 22:61,62).

### 8. நான் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்படும்போது வாதாடித் தற்காப்பு செய்கிறேனா, அல்லது எனக்காகப் போராடும்படிக் கடவுளிடம் திரும்புகிறேனா?

இயேசுவிடம் தலைமைக் குரு, "இவர்கள் உனக்கு எதிராகக் கூறும் சான்றுக்கு மறுமொழி கூறமாட்டாயா?" என்று கேட்டதற்கு இயேசு ஒன்றும் பேசாமல் அமைதியாயிருந்தார் (மத் 26:62,63). அதே கேள்வியைப் பிலாத்து கேட்டபோதும் இயேசு ஒரு வார்த்தைகூட பதில் சொல்லவில்லை! (மத்27:13,14). மாறாக, அவர் இறையரசைக் குறித்தும் சத்தியத்தைக் குறித்தும் பிலாத்துவின்முன் அறிக்கையிட்டார் (யோ 18:36,37; 1 தீமோ 6:13).

### 9. எனது எதிரிகளைத் தண்டிக்கும்படிக் கடவுளிடம் வேண்டுகிறேனா, அல்லது அவர்கள் ஆசீர் பெறப் பிரார்த்திக்கிறேனா?

இயேசு கலிலேயாவிலுள்ள மலையில் அருளுரை யாற்றியதின்படி கல்வாரி மலைமீது நடந்து காட்டினார் (மத் 5:44; லூக் 23:34).

### 10. சுய பரிதாபத்தில் அமிழ்ந்து பிறரது தேவைகளையும் வேதனைகளையும் மறந்துவிடுகிறேனா?

தமக்காக ஒப்பாரி வைத்து அழுத பெண்மணிகளை இயேசு பார்த்து, "எனக்காக அழவேண்டாம்; உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்," ஏனெனில் அவர்கள் சந்திக்கவேண்டிய காலங்கள் கொடியவை என்றார் (லூக் 23:27-29). உடலில் கொடிய வேதனையால் துடி துடித்தபோதும் தம்முடன் சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் ஒருவனின் ஆன்மீகத் தேவையைச் சந்தித்தார் (லூக் 23:39-43). தமது இடத்தை நிரப்ப தமது தாயைப் பராமரிக்க அன்னை மரியாளுக்கு ஒரு சீடனை மகனாய் அருளினார் (யோ 19:25-27).

### 11. ஜெபத்தையும் அருள் வரங்களையும் எனது ஆன்மீகத்தை வெளிக்காட்டி மக்களைக் கவருவதற்காய்ப் பயன்படுத்துகிறேனா, அல்லது இவை மூலம் கடவுளுக்குப் புகழ் நாடுகிறேனா?

விண்தூதர் தம்மைப் பாதுகாக்கவேண்டுமென இயேசு தமது தந்தையிடம் வேண்டியிருந்தால் அவருக்காக தூதர்களின் பேரணித்திரள் உடனே விண்ணிலிருந்து வந்திருக்கும். அப்படியானால் அவரது பாடுகளை முன்னறிவித்த இறைவாக்கியங்கள் எப்படி நிறைவேறமுடியும்? (மத் 26:53,54). அவ்விதமே, "சிலுவையிலிருந்து இறங்கிவா" என்று அவரை ஏளனம் செய்தவர்களின் சவாலை ஏற்று சிலுவையிலிருந்து இறங்கி வருவது இயேசுவுக்கு இயலாத காரியமல்ல. அப்படியானால், பாவங்களுக்காய்ப் பரம தந்தையின்முன் குறைவற்ற பலி எப்படிச் செலுத்தப்பட்டிருக்க முடியும்? (மாற் 15:29-32).

### 12. ஓர் இக்கட்டு அல்லது பெரும்பாட்டைக் கடந்து நான் வெற்றியாய் வெளிலகும்போது, எனக்கு மனப்பூர்வமாய் உதவாதவர்களைக் குற்றவுணர்வடையச் செய்கிறேனா?

கிறிஸ்துவின் சீடர் அவரைக் காட்டிக்கொடுத்தனர், மறுதலித்தனர், சபித்தனர், விட்டு ஓடினர்; ஆனால் அவரோ உயிர்த்தெழுந்த பின்னர் ஒரு முறையேனும் அவர்களது தோல்விகளை அவர்களுக்குச் சுட்டிக்காட்டவில்லை. மாறாக, முன்னதாகவே அவர் அவர்களுக்குக் கொடுத்துவிட்ட வாக்கு இதோ: "எனக்கு ஏற்பட்ட சோதனைகளில் என்னோடுகூட இருந்தவர்கள் நீங்களே. எனவே என் ஆட்சி வரும்போது நீங்கள் என்னோடு பந்தியில் அமர்ந்து உண்டு குடிப்பீர்கள்... அரியணையில் அமர்வீர்கள்!" (லூக் 22:28-30). அவர் அவர்களை உலகெங்கும் பணி செய்ய அனுப்பி அவரும் அவர்களோடு சென்றார் (மாற் 16:15,20).

**Source: www.stanleyonbible.com**



பரிசுத்த வேதாகமம் புரிந்துகொள்வது கடினமானது அல்ல. அதனை உள்வாங்கிக் (உட்)கொள்வதுதான் கடினம். - ஸ்டீவ் லாசன்

# துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - அக்டோபர் 2025

**துதிப்போம்:**

1. 2025 August மாதத்தில் வேதவாசிப்பை நிறைவு செய்தவர்களுக்காக.
2. 2025 செப்டம்பர் மாத வேதவாசிப்பு குழுக்கள் பல தடைகளையும் தாண்டி ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருவதற்காக..
3. தற்பொழுது நிறைவு பெற்றுள்ள சிறுவர் வேதவாசிப்பு குழுக்கள் பருவம் 1 ல் பங்கு பெற்று வேத வசனங்களை வாசித்த, வேத வசனங்களை மனனம் செய்த பிள்ளைகளுக்காக.
4. 2025 August மாதத்தில் நடந்து முடிந்த GODependence கருத்தரங்கு வெகு சிறப்பாக நடைபெற்றதற்காக; அநேகர் அதன் மூலம் பயனடைந்ததற்காக.
5. 2025 டிசம்பர் 16 - சர்வதேச வேதாகம வாசிப்பு தினத்தை (International Day of Bible Reading) முன்னிட்டு GODependence குழு பல்வேறு நிகழ்வுகளை திட்டமிடும்படி செப்டெம்பர் 7 அன்று கூடிவர ஆண்டவர் பாராட்டின கிருபைகளுக்காக.

**ஜெபிப்போம்:**

**1**. 2025 செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்டுள்ள வேத வாசிப்பு குழுக்கள் மற்றும் அதில் இணைந்து இருப்பவர்கள் தடைகளை தாண்டி வேதவாசிப்பில் முன்னேறிச் செல்ல.
2. 10 மொழிகளிலும் வேதவாசிப்பு சவால்களில் பயன்படுத்தும் GODependence ன் மூன்று WhatsApp எண்களும் Spam issue வினால் தடைபடாமல் இருக்க.
3. 2025 அக்டோபர் மாதத்தில் GODependence கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட.
4. 2025 டிசம்பர் 16 - சர்வதேச வேதாகம வாசிப்பு தினத்தை (International Day of Bible Reading) முன்னிட்டு திட்டமிடப்படுகிற நிகழ்வுகளுக்காக மற்றும் உலகமெங்கிலும் வாழும் கிறிஸ்தவர்கள் உற்சாகத்துடன் இவற்றில் கலந்து கொண்டு சிறப்பிக்க.
5. மனன வசன போட்டிக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் சிறுவர் வேதவாசிப்பு குழுக்கள் பருவம் 1 ல் பங்குபெற்ற பிள்ளைகளுக்காக. அவர்கள் அநேக வசனங்களை மனனம் செய்து அதை சிறப்பாக சொல்ல மற்றும் அவற்றை வாழ்வில் கடைபிடிக்க.

## சர்வதேச வேதவாசிப்பு தினம் – 16 டிசம்பர்

தேவனுடைய வார்த்தையை அனைவரும் வாசிக்கவும், அறியவும் தக்கதாக அனைவருக்கும் பரிசுத்த வேதாகமத்தை கிடைக்கச் செய்வது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தேவனால் ஏற்படுத்தப்பட்ட சிறுமி மேரி ஜோன்ஸ் அவர்களின் நினைவாக 16 டிசம்பர் 2023 அன்று, முதன்முதலாக "சர்வதேச வேதவாசிப்பு தினத்தை" (International Day of Bible Reading) அனுசரித்தது GODependence குழுவிற்கு கிடைத்த பாக்கியமாகும்.

அந்த நாளில் Zoomல் நடைபெற்ற ஆரம்பவிழா கூடுகையில் நூற்றுக்கணக்கான GODependence வேதவாசிப்பு சவால் குழுக்களின் பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த சர்வதேச வேதவாசிப்பு தினத்தை அனுசரிக்கும்படியாக எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளின் மூலம் உலகம் முழுவதும் இருந்து 5000 க்கும் மேற்பட்டோர் இது குறித்து அறிந்து கொண்டனர்.

டிசம்பர் 16, 2024 அன்று நடைபெற்ற இரண்டாவது சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் (IDBR 2024), மூன்று மொழிகளில் Zoom கூட்டங்களை ஏற்பாடு செய்ய முடிந்தது. மேலும், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் ஒரு மெகா ஆன்லைன் வேத வினாடி வினா மற்றும் தனித்தனியே இரு மொழிகளிலும் 8-மணி நேர ஆன்லைன் தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சிகள் (Bible Readathons) நடத்தப்பட்டன.

மூன்றாவது சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR 2025) டிசம்பர் 16, 2025 அன்று கடைப்பிடிக்கப்படும். இந்த ஆண்டு முதல், டிசம்பர் 16 எந்த நாளில் வருகிறது என்பதைப் பொருட்படுத்தாமல் சர்வதேச வேதவாசிப்பு தின நிகழ்ச்சிகளை எளிதாக நடத்துவதற்காக, இந்த தினத்தை ஒவ்வொரு ஆண்டும் ஒரு சர்வதேச வேதவாசிப்பு வாரமாக (டிசம்பர் 10–16) விரிவுபடுத்த முடிவு செய்துள்ளோம்.

இந்த வருடம் GODependence வேதவாசிப்பு சவால்கள் நடத்தப்படும் அனைத்து 10 மொழிகளிலும், முடிந்தவரை அதிகமான நாடுகளிலும் IDBR 2025 நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதை நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். அதன் செயல் திட்டம் மற்றும் பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த கூடுதல் விவரங்கள் அடுத்த மாத செய்திமடலில் பகிரப்படும்.

தயவு செய்து IDBR 2025 திட்டங்களுக்காக உங்கள் ஜெபங்களில் தொடர்ந்து நினைவுகொள்ளுங்கள்.

மனிதர்கள் வெறுக்கிற சத்திய உண்மையை உடையதாக வேதாகமம் இருக்கிறது. - சார்லஸ் ஸ்பர்ஜன்

## 📕 வேதவாசிப்பு சவால்கள் - 01 அக்டோபர் 2025 முதல்

"வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும், இயேசுவை நோக்கிச் செல்ல வழிகாட்டுகிறது." - சார்லஸ் ஸ்பர்ஜன். உங்களுக்கு வசதியான நேரத்திலும் வேகத்திலும் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நாங்கள், GODependence உங்களுக்கு உதவுகிறோம்.




**நமது வேதவாசிப்பு சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள் பின்வருமாறு:**

👩‍🦳♀ ”வீணாக்கிக் கொண்டிருந்த எனது நேரத்தை ஒழுங்குபடுத்தி, தேவனுடைய வேதத்தை வாசிக்க வைத்து, தேவனுக்குள் என்னை வழிநடத்திய GODependence குழுவிற்கு நன்றி." - K. Jeyakumari

👩‍🦳♀ ”GODependence வேத வாசிப்பு சவால் மூலமாக முதல் முறையாக நான் பரிசுத்த வேதாகமத்தை முழுவதுமாக வாசித்து முடித்துள்ளேன். மிகவும் மகிழ்ச்சி. தேவனுக்கு மகிமை.” - M. Regina Praba

👩‍🦳♀ ”இந்த வேதவாசிப்பு சவால், ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வளருவதற்கு உதவிய, நிலைத்தன்மை மற்றும் ஒழுங்கு உடைய ஒரு அற்புதமான பயணமாக இருந்தது."- Jovita

உங்கள் வேதவாசிப்பு முயற்சிகளில் உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்படுகிறதா? ஆம் எனில், 01 அக்டோபர் 2025 முதல் தொடங்கும் "வேத வாசிப்பு சவால்களுக்கு" GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

**.இதன் சிறப்பு அம்சங்கள்:**

✷ வேதவாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

✷ 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

✷ முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.

✷ வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

✷ வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

✷ வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

✷ அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

✷ பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

👉 எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்பு சவால்களில் ஒன்றில் சேர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு காலஅளவுத் திட்டம் மற்றும் மொழி_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். 🙏

**https://wa.me/96565962559**

- **GODependence குழு**

**** ☝ இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே!



**பரிசுத்த வேதாகமம் இந்த உலகத்துக்கு ஒளியாக அல்ல, கிறிஸ்தவச் சபைக்கு வெளிச்சமாக இருக்கிறது. இந்த உலகமானது வேதாகமத்தை வாசிப்பதில்லை; மாறாக கிறிஸ்தவர்களை வாசிக்கிறது! “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.” - சார்லஸ் ஸ்பர்ஜன்**

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 11

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

கொடுக்கப்பட்டுள்ள படங்களிலிருந்து பிலிப்பியரிலுள்ள வசனங்களை/பெயரை/இடத்தை கண்டறியவும்

வசனங்களை கண்டு பிடி




https://forms.gle/FzKsXHwoDctQQ6Fg6

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 05/10/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## GODependence சமூக ஊடக தளங்கள்

### GODependence WhatsApp Channel

JOIN NOW!

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேதவாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R




### GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல்
1.2K சந்தாதாரர்களையும்
265 வீடியோக்களையும் எட்டியுள்ளது

CLICK HERE https://youtube.com/@godependencetamil







### ஆசிரியர் குழு

- பேதுரு தேவதாசன்
- அற்புதராஜ் சாமுவேல்
- ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
- ஏ. ஆர். பீட்டர்
- டெ. டென்சிங்
- டார்வின் நேசகுமார் அ
- ஷோபா தானியேல்
- ஜோசஃபீன் ஷைனி பால்
- கேதரின் சுஜி

### GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.

நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.

தமிழ் - +965 6596 2559

ஆங்கிலம் - +91 95255 95265

பிற மொழிகள் - +91 99628 34944

(ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி)

பரிசுத்த வேதாகமம் இந்த உலகத்துக்கு ஒளியாக அல்ல, கிறிஸ்தவச் சபைக்கு வெளிச்சமாக இருக்கிறது. இந்த உலகமானது வேதாகமத்தை வாசிப்பதில்லை; மாறாக கிறிஸ்தவர்களை வாசிக்கிறது! “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்.” - சார்லஸ் ஸ்பர்ஜன்



## உங்களுக்குத் தெரியுமா?

### காலத்திற்கு ஒரு ஆரம்பம் உண்டா?

"காலம்" என்றால் என்ன? காலத்திற்கு ஒரு ஆரம்பம் உண்டா? புகழ்பெற்ற கணிதவியலாளர் சர் ஐசக் நியூட்டன் உட்பட பல விஞ்ஞானிகளும் அறிஞர்களும் காலம் எப்போதும் இருப்பதாகவும் அதற்கு ஆரம்பம் இல்லை என்றும் நம்பினர்.

காலம் என்பது இந்தபிரபஞ்சத்தின் நிகழ்வுகளின் தொடர்ச்சியான வரிசையாகும். இது கடந்த காலத்திலிருந்து நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் திரும்பமுடியாத முன்னேற்றத்தில் வெளிப்படுகிறது. காலம் இருப்பதற்கு, இந்த பிரபஞ்சம் இருக்க வேண்டும். பிரபஞ்சத்திற்கு ஒரு ஆரம்பம் இருப்பதை நாம் அறிந்திருப்பதால், காலத்திற்கும் ஒரு ஆரம்பம் இருக்கும்

**பரிசுத்த வேதாகமம் இந்த உண்மையை 2000 ஆண்டுகளுக்கு முன்பே வெளிப்படுத்தியது. "ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படி..." (2 தீமோத்தேயு 1:9).**

பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட இந்த அறிவு அது எழுதப்பட்ட நேரத்தில் இருந்த மனித அறிவையும் விஞ்சியது.

**பரிசுத்த வேதாகமத்தை நீங்கள் இன்னும் வாசிக்கவில்லை என்றால், இன்று ஏன் அதை ஆரம்பிக்கக் கூடாது?**







## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 10 மற்றும் வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 10 இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள் மற்றும் சரியான பதில்கள்

**வேதப்பகுதி: எபேசியர்**

### வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 10

➡ இடமிருந்து வலம்
1. தேவகோபாக்கினை (5:6)
7. ஈவு (2:8)
10. சிலுவை (2:16)

⬇ மேலிருந்து கீழ்
2. கோபம் (4:31)
3. கிறிஸ்து (4:15)
4. மீட்பு (1:7)
8. கிருபை (3:8)

⬆ கீழிருந்து மேல்
6. பிசாசு (4:27)
11. அழைப்பு (4:1)
12. சத்தியம் (6:14)
14. கடுஞ்சொல் (6:9)

⬅ வலமிருந்து இடம்
5. ஞானம் (3:10)
9. அநாதி (3:9)
12. சபை (4:12)
13. வம்பு (5:4)

**சரியான பதில்களை அனுப்பிய 7 நபர்கள்:**

- உ.சுகந்தி குமார்
- இ. உதயகுமார்
- ஜான்ஸ்.ஜே
- அ.ஜாய்ஸ் செல்லத்துரை
- கறிஸ்டி ஜோசப்
- மணி மாலா ச.
- பி.விஜிலா

### விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 10

**கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கொண்டு எபேசியரில் வரும் வசனங்களை கண்டுபிடி.**

1) எபேசியர் 5:16
2) எபேசியர் 6:12
3) எபேசியர் 4:29
4) எபேசியர் 4:2,3
5) எபேசியர் 6:18
6)எபேசியர் 1:4
7) எபேசியர் 1:13
8எபேசியர் 3:18
9) எபேசியர் 2:7
10 எபேசியர் 4:24

**சரியான பதில்களை அனுப்பிய 5 நபர்களின் பெயர்கள் :**

- ஜே.எம்.சிமி
- உ.மிராக்கிளின் ஜெஸி
- கிறிஸ்டி ஜோசப்
- கிறிஸ்டி ஜோசப்
- பி.விஜிலா

பரிசுத்த வேதாகமமானது நீங்கள் முன்னேறிச் செல்லவும், ஆழமான கடலில் இருந்து தப்பிப்பதற்கும், துறைமுகம் எங்கே இருக்கிறது என்பதை உங்களுக்குக் காண்பிப்பதற்கும், மற்றும் கடல் பாறைகள் மேல் மோதாமல் பத்திரமாக கரைசேர்வதற்கும் வழிகாட்டும் தேவனுடைய வரைபடம் ஆகும்.
- ஹென்றி வார்டு பீச்சர்

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

**31 ஆகஸ்ட்2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்**



















தேவன் தன் (வேதப்) புத்தகத்தை மிக நீண்டகாலமாக எப்படி பாதுகாத்துவருகிறார் என்பது ஒரு அற்புதம் ஆகும். - மார்ட்டின் லூத்தர்

# ஒநேசிப்போரு

## "அப்போஸ்தலன் பவுலுக்குப் புத்துணர்ச்சி அளித்த ஒரு துணிச்சலான சீடர்"

-அப்போஸ்தலர் 9:36–42

**ஒநேசிப்போரு** என்பவர் **எபேசு** பட்டணத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவர் ஆவார். இவரைப் பற்றி பவுல் **தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாவது நிருபத்தில்** குறிப்பிட்டுள்ளார். இவர் தனது உண்மைத்தன்மை மற்றும் கருணைக்காக நினைவுகூரப்படுகிறார். குறிப்பாக, அப்போஸ்தலன் **பவுல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது** அவரைத் தேடி ரோமுக்குச் சென்றதை (2 தீமோ. 1:17) பவுல் நெகிழ்வுடன் குறிப்பிடுகிறார்.

பயத்தினால் பவுலைக் கைவிட்ட பலரைப் போலல்லாமல், ஒநேசிப்போரு அவரைக் கண்டுபிடிக்கும்வரை விடாமுயற்சியுடன் தேடினார். அவர் பவுலுக்குப் **புத்துணர்ச்சி அளித்து, ஊக்கப்படுத்தினார்.** இது **தைரியத்தையும் விசுவாசத்தையும்** காட்டுகிறது. கைதிகளை — குறிப்பாகக் கிறிஸ்தவர்களை — ஆதரிப்பது என்பது அதிகாரிகளிடமிருந்து சந்தேகத்தையோ அல்லது தண்டனையையோ கொண்டு வரக்கூடிய ஆபத்தான செயல்.

பெரும்பாலான மக்கள் சிறையில் இருப்பவர்களுடன் கூட்டுறவு கொள்ளத் தயங்குவார்கள்; குற்றவாளிகளுடனான நட்பை வெளிப்படுத்த விரும்ப மாட்டார்கள். ஆனால், ஒநேசிப்போருவோ அவ்வாறு செய்தார்.

அதனால்தான் பவுல், **"ஒநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைக்குறித்து அவன் வெட்கப்படவுமில்லை"** (2 தீமோ. 1:16) என்று ஜெபித்தார். இதன் மூலம், ஒநேசிப்போரு பவுல் சிறையில் இருந்தபோது **உடல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும்** அவருக்கு உதவி செய்தார் என்பதை நாம் அறியலாம்.

### சிந்திக்க வேண்டிய குறிப்புகள்

- கிறிஸ்துவின் மீதான **விசுவாசத்தின் காரணமாக மற்றவர்களால் கைவிடப்பட்ட** விசுவாசிகளுடன் நிற்க நான் தயாரா?
- ஆபத்துக்களை எடுக்க வேண்டியிருந்தாலும், அவர்களுக்கு உதவ நான் **முன்வருவேனா?**
- என்னை விடக் **குறைவான சமூக அந்தஸ்து கொண்ட** விசுவாசிகளுடன் கூட்டுறவு கொள்ள நான் தயாரா?
- வாழ்க்கையின் சுமைகளால் சோர்வடைபவர்களுக்கு **புத்துணர்ச்சி அளித்து ஊக்குவிக்க** என்னால் முடியுமா?

**– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 11

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 2 |
| | | | | | 3 | |
| | ■ | 4 | | | | |
| | | | | | 5 | |
| | | | 6 | | | |
| 7 | | | | | ■ | ■ |
| ■ | | | | | | 8 |

### வேதப்பகுதி: பிலிப்பியர்

**➡️ இடமிருந்து வலம்**

1. பிலிப்பியர் பவுலுக்கு அளிக்கப்பட்ட _____யில் பங்குள்ளவர்கள்(3)
4. அற்பமான ____ மகிமையானதாக மறுரூபப்படும்(4)
6. சாவு பவுலுக்கு ____ (4)
7. பவுலைப் போன்ற மனதுள்ளவன் (5)

**⬅️ வலமிருந்து இடம்**

2. நியாயப்பிரமாணத்தினால் வருவது (4)
3. பவுல் எந்த கோத்திரத்தான்? (5)
5. சமீபமாயிருக்கிறவர் (5)
6. இசைந்த _____க்களாய் ஒன்றையே சிந்தியுங்கள் (4)
8. கொடுக்கல் வாங்கலில் பவுலுடன் உடன்பட்டவர்கள்(6)

**⬇️ மேலிருந்து கீழ்**

1. பவுலுக்கு ஜீவன் ____ (4)
2. பவுலுக்கு சம்பவித்தவைகள் _____ பிரபலமாக ஏதுவாயிற்று (5)

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

CLICK HERE https://forms.gle/yaHgtNebKE6pK8oT7

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 05/10/2025 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

இந்த உலகத்திற்கு இரட்சகர் அருளிய நன்மைகள் அனைத்தும் பரிசுத்த வேதாகமம் மூலமாக சொல்லப்பட்டிருக்கிறது. - ஆபிரகாம் லிங்கன்

GODependence
True freedom is being dependent on God

# Bible Reading Challenges

## GODependence வேதவாசிப்புச் சவால்களில் உள்ள சிறப்புத் தன்மைகள்

1. 1 மாதம் முதல் 1 வருடம் வரையிலான வேதவாசிப்பு காலத்தை வசதிக்கேற்ப தெரிவு செய்து கொள்ளும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தை 1 மாதம் / 2 மாதங்கள்/ 3 மாதங்கள்/ 4 மாதங்கள்/ 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்].
2. உங்களுக்கு விருப்பமான மொழியில் வேதத்தை வாசிக்கும் வாய்ப்பு-10 மொழிகள் (ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி).
3. வேதவாசிப்புப் பகுதி முந்தின தினம் இரவிலேயே பகிரப்படும்.
4. வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் அனுதின மேற்கோள்கள் (Quotes).
5. வேத வாசிப்பில் முன்னேற்றத்தை சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் வாரந்தோறும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, மற்றும் மாதமொரு முறை என நடைபெறும் மீள்பார்வைகள் (Reviews).
6. தவறிய பகுதிகளை வாசிக்க Catch-Up நாட்கள் மற்றும் தேவைப்பட்டால் வேதவாசிப்பு காலத் திட்டங்களை மாற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு.
7. அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள் - இது வேதவாசிப்புக்கென உள்ள தனித்துவமான குழு.
8. பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டது).
9. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எங்கும் எந்த விதமான கட்டணமும் கேட்கப்படாது.
10. தேவனுடைய வார்த்தையுடன் (வேத தியானம், வேத மனனம் மற்றும் வேத ஆராய்ச்சி என) மேற்கொண்டு ஈடுபடுவதற்கான வாய்ப்பு.

**முறையாக மற்றும் முழுமையாக**
**வேதாகமத்தை வாசிக்க மிக அருமையான ஒரு வாய்ப்பு!**

https://www.godependence.com/brc



பரிசுத்த வேதாகமத்தில் இல்லாத எதையும், பரிசுத்த வேதாகமத்தில் நிரூபிக்கப்பட முடியாத எதையும் நாம் பெறுவதோ, நம்புவதோ, பின்பற்றுவதோ இல்லாமல் இருப்பதாக. - ஜே.சி. ரைல்

- சகோதரி. லீதியாள் சுலோசனா

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

கர்த்தருடைய நாமத்துக்கு மகிமை உண்டாவதாக. என்னுடைய பெயர் லீதியாள் சுலோசனா. நாங்க இந்து குடும்பத்திலிருந்து 2000 ஆவது ஆண்டில் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டோம். நானும் என்னுடைய மகளும் முழுமையாக கர்த்தருக்குள்ளே ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டோம். என் மகளை கிறிஸ்துவ குடும்பத்தில் திருமணம் செய்து கொடுத்து, அவர்கள் குடும்பமாக கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். எனக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். அவர்களும் அவர்கள் குடும்பமும் இன்னும் ஆண்டவரை ஏற்றுக் கொள்ளவேண்டியது இருக்கிறது.

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்? அவற்றுள் GODependence வேதவாசிப்பு மூலமாக எத்தனை முறை வாசித்திருக்கிறீர்கள்?**

அப்படியே கர்த்தர் கிருபையில் பைபிள் படித்துக்கொண்டு வரும்போது, ஒரு முறைதான் முழுமையாக வாசித்திருக்கிறேன். அதன் பிறகு ஒவ்வொரு வருஷமும் தொடங்குவேன். முடிக்க முடியாது. இப்படியே ஒவ்வொரு வருடமும் என்னால் முடிக்க முடியாமல் இருந்தது. நீங்கள் வேதத்தை வாசிப்பதற்கான வழிமுறைகள் என்று சொல்லி 2019-ல் Godependence பற்றி எனக்கு வாட்ஸ்அப்பில் ஒரு மெசேஜ் வந்தது. அது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தபடியால் நானும் அந்த வாட்ஸ் அப் குழுவில் இணைந்து படிக்க ஆரம்பித்தேன்.

முதல்முறையாக ஒரு மாதத்தில் வேதத்தை படித்து முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதன் பிறகு 2 மாதம், 3 மாதம், 4 மாதம், 6 மாதம் என்று வருடத்திற்கு இரண்டு முறை அல்லது மூன்று முறை வேதத்தை படித்து முடிக்க Godependence எனக்கு உதவி செய்தது. 2024-ல் இரண்டு முறை முடித்தேன. அதன் பிறகு ஒரு வருட குழுவில் இணைந்திருந்தேன்.

**GODependence குழுவின் நடைமுறைகள் எந்த விதத்தில் உங்களுக்கு உதவின?**

ஜெப ஊழியங்கள், வீடு சந்திப்பு ஊழியங்கள் மற்றும் ஜூம் மீட்டிங்கில் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்ள ஒரு வருட குழுவில் பகிரப்படும் வேத தியானம் மிகவும் பிரயோஜனமாக இருந்தது. தேசத்திற்காக ஜெபிக்கும்படி கொடுக்கப்படும் ஜெபகரிசனைகளும் மிக உதவியாக இருக்கும். இந்த வார வேத வினாடி வினாவில் பங்கு பெற்று பதில் அளிப்பது மிகவும் ஆர்வமாக இருக்கும். குழுவில் பகிரப்படும் வீடியோக்களை பார்ப்பதற்கு எனக்கு நேரம் இருப்பதில்லை. GODependence வேதவாசிப் சவால்களை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்தி அவர்களையும் இதில் இணைய வைத்துக் கொண்டிருக்கிறோம் அனைவரும் பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

**நீங்கள் பரிசுத்த வேதாகமம் வாசிக்கும்போது பெற்றுக்கொண்ட நன்மைகள் என்ன?**

இந்த வேத வாசிப்பு சவால்களில் நான் கலந்து கொண்டபடியால் பெற்றுக்கொண்ட நன்மைகள் என்னவென்றால் எப்பொழுதும் வேதத்தோடு இருக்கக்கூடிய ஒரு அனுபவத்தை பெற்றுக்கொள்ள பயனுள்ளதாக இருந்தது. வேதப்பகுதிகளை பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என்று எல்லா பகுதிகளிலிருந்தும் கலந்து கொடுப்பதினால், ஒரு தோட்டத்தில் உலாவி அங்கு இருக்கிற எல்லா காய்கறிகளையும் சேகரித்து பயன்படுத்துவதுபோல ஊழியங்களில் அதிகமாக வசனங்களை பயன்படுத்துவதற்கு உதவியாக இருக்கிறது.

**நீங்கள் பரிசுத்த வேதாகமம் வாசிக்கும்போது ஏற்பட்ட தடங்கல்கள் என்ன? அவற்றை எவ்வாறு மேற்கொண்டீர்கள்?**

என்னுடைய சரீர பலவீனம், வீடு கட்டுகிற வேலை, கண் வலி, பிரயாணங்கள் மற்றும் ஊழியங்கள் ஆகியவற்றின் காரணமாக அதை என்னால முடிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. முடிக்க வேண்டிய நாளுக்குள்ளாக நானும் படித்து முடித்து விட வேண்டும் என்று ஜெபம் பண்ணினேன் கர்த்தர் ஜெபத்தை கேட்டு, வாசித்து முடிக்க கிருபை செய்தார்.

**இறுதியாக, நீங்கள் ஒரிரு வாக்கியங்களில் சொல்லவிரும்புவது என்ன?**

எனது இரண்டு மகன்களும் அவர்களுடைய குடும்பமும் இரட்சிக்கப்படுவதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். இந்த ஊழியங்களையும் அதற்காக பிரயாசப்படுகிற ஒவ்வொரு பிள்ளைகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

**வேதமும் நானும்;வேதத்தோடு இருக்கிற அனுபவமும், எனக்குள் மாற்றத்தை ஏற்படுத்தினது** — **PR. K. PAUL MANOHARAN**

**கையிடும் வேலை ஆசிர்வதிக்கப்பட கையிலே வேதாகமம் எடுத்து வாசித்தேன் .** — **JAYAMARY VIJAY KUMAR**



அனுதினமும் வேதாகமத்தை வாசித்து அறிந்துகொள்ள உங்கள் நேரத்தை செலவிடுங்கள். அது உங்களுடைய ஆவிக்குரிய உணவு. பின்பு அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அனலும் குளிருமற்ற ஒரு கிறிஸ்தவனாக இருக்கமாட்டேன் என்ற ஒரு உறுதிமொழியை எடுத்துக்கொள்ளுங்கள். - கிர்க் கேமரூன்

# பிலிப்பியர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 60- கி.பி. 62

**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 60

**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்

**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- இக்கடிதம் ஒற்றுமை பற்றியும் சந்தோஷம் பற்றியும் அருமையான கருத்துக்களை எடுத்துக்கூறுகிறது. கிறிஸ்து இயேசுவின் வழியாய் அவற்றைப் பெற இயலும் என அழுத்தமாக எடுத்துரைக்கிறது.

## சூழலும் நோக்கமும்

- பவுலின் சிறைக் கடிதங்களில் ஒன்றான பிலிப்பியர்களுக்கான கடிதம் ரோமில் எழுதப்பட்டது. பவுல் அப்போஸ்தலன் தனது இரண்டாவது மிஷனரி பயணத்தில் (அப் 16:12) பயணம் செய்த பிலிப்பியில் தான், லீதியாளும் பிலிப்பிய சிறைக்காவலரும் அவருடைய குடும்பத்தினரும் கிறிஸ்துவுக்குள் வரவைக்கப்பட்டனர். சில ஆண்டுகளுக்குப் பிறகு அங்கு திருச்சபை நன்கு நிறுவப்பட்டது. இக்கடிதம் குறிப்பாக பவுலின் இதயத்திற்கு நெருக்கமாக இருந்த கிறிஸ்தவக் குழுவிற்கு ஒரு மென்மையான கடிதம் (2 கொரி 8:1-6) ஆகும். பவுல் தம் இரண்டாம் நற்செய்திப் பயணத்தின்போது பிலிப்பில் பலரை மனம் மாற்றினார். சிறைப்பிடிக்கப்பட்டும், வியத்தகு முறையில் சிறையிலிருந்து தப்பினார். மூன்றாம் நற்செய்திப் பயணத்தின்போதும் அங்கு வந்தார் (அப் 20:1,6). எப்பப்பிராதித்து கடுமையாக நோயுற்றப்பின் குணம் பெற்ற பின் பவுல் பிலிப்பியர் சிறையிலிருந்து கடிதத்தை எழுதி அவரிடம் கொடுத்து அனுப்பினார் (2:25-30). தமக்கு உதவி செய்த பிலிப்பியருக்கு நன்றி செலுத்துவதற்காகவும் அவர்கள் மகிழ்வோடும் மன உறுதியோடும் கிறிஸ்தவ நம்பிக்கையோடு இலங்க வேண்டும் என்பதற்காகவும் இக்கடிதத்தை எழுதுகிறார்.

## முக்கிய வசனங்கள்

பிலி 1:21, பிலி 3:7, பிலி 4:4, பிலி 4:6-7, பிலி 4:13

## புத்தகத்தின் சுருக்கம்

- இது பவுல் ரோமில் சிறையில் இருந்தபோது, கிறிஸ்துவின் பரமேறலுக்குப் பிறகு சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகும், பவுல் பிலிப்பியில் முதன்முதலில் பிரசங்கித்த பத்து வருடங்களுக்குப் பிறகும் எழுதப்பட்டது. இதில் நம் மனதில் கிறிஸ்து, கிறிஸ்து நம் இலக்கு, கிறிஸ்து நம் பலம், மற்றும் துன்பத்தின் மூலம் சந்தோஷம் போன்றவை மையங்களாக உள்ளன.பவுல் நீரோவின் கைதியாக இருந்தபோதிலும், கடிதம் மிகவும் வெற்றியுடன் எழுதப்பட்டது. "சந்தோஷம்" & "சந்தோஷம்" என்ற வார்த்தைகள் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது (பிலி 1:4, 18, 25, 26; 2:2, 28; பிலி 3:1, 4:1 , 4, 10). சரியான கிறிஸ்தவ அனுபவமே, நம் சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், நம்மில் வாழும் கிறிஸ்துவின் வாழ்க்கை, இயல்பு மற்றும் மனம் ஆகியவற்றின் வெளிப்பாடாகும் (பிலி 1:6, 11; 2:5, 13). நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அவமானம் மற்றும் மேன்மை பற்றிய புகழ்பெற்ற மற்றும் ஆழமான அறிவிப்புடன் பிலிப்பியர் 2:5-11 ல் அதன் உச்சத்தை அடைகிறது. இக்கடிதத்தில் பவுல் தன்னிலை விளக்கம் தருகிறார் (1:12-26; 4:10-19); தாம் சிறைப்பட்டதைப் பற்றி எடுத்துரைக்கிறார்; துன்பங்களில் பிலிப்பியர் மனவுறுதியோடு இருக்குமாறு கேட்டுக் கொள்கிறார் (1:27, 30; 4:4); பிலிப்பியர் தாழ்மையுடனும் ஒற்றுமையுடனும் இருக்குமாறு வேண்டுகின்றார்; தம்மை மிகவும் தாழ்த்தியப்பின்னர் தந்தையால் உயர்த்தப்பட்;ட இயேசுவை முன்மாதிரியாகக் காட்டுகிறார் (2:1-11; 4:2-3). திமோத்தேயும் எப்பாப்பிராதித்துவையும் பிலிப்பியத் திருச்சபை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனப் பவுல் விரும்புகிறார் (2:19-30). யூதமயமாக்கலைக் குறித்துப் பிலிப்பியரை எச்சரிக்கிறார் (3: 1-21). தமக்கு உதவி செய்த பிலிப்பியருக்கு நன்றி செலுத்துகிறார் (4:10-20).

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- அவரது பல கடிதங்களைப் போலவே, பிலிப்பி திருச்சபையின் புதிய விசுவாசிகளை பவுல் எச்சரித்தார், இது ஆரம்பகால திருச்சபைகளில் தொடர்ந்து வளர்ந்துவந்த நியாயப்பிரமாணத்தை நோக்கிய போக்கு குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பவுல் எச்சரிக்கிறார். யூதர்கள் கிரியைகளின் மூலமாக இரட்சிப்பின் போதனைக்குத் திரும்புவதற்கு தொடர்ந்து முயற்சி செய்தனர். ஆனால் விசுவாசத்தினால் மட்டுமே கிறிஸ்தவ இரட்சிப்பு என்று பவுல் மீண்டும் வலியுறுத்தினார் மற்றும் யூதவாதிகளை "நாய்கள்" மற்றும் "தீமை செய்யும் மனிதர்கள்" என்று முத்திரை குத்தினார். குறிப்பாக, பழைய உடன்படிக்கையின்படி (ஆதி 17:10-12; லேவி 12:3) கிறிஸ்துவுக்குள் வந்த புதிய விசுவாசிகள் தொடர்ந்து விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்று சட்டவாதிகள் வலியுறுத்தினர். இந்த வழியில், அவர்கள் தங்கள் சொந்த முயற்சியால் தேவனைப் பிரியப்படுத்த முயன்றனர் மற்றும் சடங்கில் பங்கேற்காத புறஜாதி கிறிஸ்தவர்களுக்கு மேலாக தங்களை உயர்த்திக் கொண்டனர். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் இனி சுத்தமான இதயத்தின் அவசியத்தை அடையாளப்படுத்தும் சடங்குகளைச் செய்ய மாட்டார்கள் என்று பவுல் விளக்கினார்.

## நடைமுறைப் பயன்பாடு

- துன்புறுத்தலின் நேரத்தில் விடாமுயற்சியுடன் இருக்கவும், "ஒரே ஆவியில் உறுதியாக நிற்கவும், சுவிசேஷத்தின் விசுவாசத்திற்காக ஒரே ஆத்துமாவினாலே போராடவும்" (பிலி 1:27) பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார். பிலிப்பியரின் மற்றொரு பயன்பாடு, கிறிஸ்தவர்கள் மனத்தாழ்மையில் ஒன்றுபட வேண்டிய அவசியம் ஆகும். நாம் கிறிஸ்துவுடன் ஒன்றுபட்டுள்ளோம், அதே வழியில் ஒருவருக்கொருவர் ஐக்கியமாக இருக்க முயற்சி செய்ய வேண்டும் என்று பவுல் நமக்கு நினைவூட்டுகிறார், “ஒத்த எண்ணம் கொண்டவர்களாய், ஒரே அன்பு உள்ளவர்களாய், உள்ளத்திலும் நோக்கத்திலும் ஒருவராக இருங்கள்” மற்றும் அகந்தையையும் சுயநலத்தையும் விலக்கி, “ஆனால் தாழ்மையுடன் மற்றவர்களின் நலனுக்காகவும் அக்கறையுடனும் ஒருவருக்கொருவர் இருக்க வேண்டும்” பிலி 2:2-4) போன்ற பவுலின் அறிவுரையை நாம் அனைவரும் கவனத்தில் எடுத்துக் கொண்டால் இன்று தேவாலயங்களில் மோதல்கள் மிகக் குறைவாக இருக்கும். கிறிஸ்து அறிவிக்கப்படுவதைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைகிறார் (பிலி 1:8), அவர் தனது துன்புறுத்தலில் மகிழ்ச்சியடைகிறார் (2:18). தேவனில் மகிழ்ச்சியடையுமாறு அவர் மற்றவர்களை அறிவுறுத்துகிறார் (3:1). மேலும் அவர் பிலிப்பியச் சகோதரர்களை தனது "மகிழ்ச்சி மற்றும் கிரீடம்" என்று குறிப்பிடுகிறார் (4:1). “கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்,சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் கூறுகிறேன்” (4:4-7). விசுவாசிகளாகிய நாம், “எல்லாவற்றிலும் ஜெபத்தினாலும் விண்ணப்பத்தினாலும் [நம்] விண்ணப்பங்கள் தேவனுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்” (4:6).

## நூலின் அமைப்பு

1) முன்னுரை 1:1 - 11 (வாழ்த்தும், நன்றியும் ஜெபமும்)
2) பவுலின் தன்னிலை விளக்கம் 1:12 - 26
3) கிறிஸ்தவ வாழ்வு 1:27 - 2:18
4) தீமோத்தேயு, எப்பப்பிராதீத்து குறித்த திட்டம் 2:19 - 30
5) எதிரிகள் குறித்து எச்சரிக்கை 3:1 - 4:9
6) பவுலும் பிலிப்பிய நண்பர்களும் 4:10 - 20
7) முடிவுரை 4:21 - 23

GODDependence

தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

தேவனுடனும் மற்றும் அவருடைய வார்த்தையுடனும் செலவழிக்கும் ஐந்து நிமிடங்கள் அந்த நாளின் மீதமுள்ள நேரங்களைப் பார்க்கிலும் மதிப்புமிக்கதாகும். - ஆஸ்வல்டு சேம்பர்ஸ்

## ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த இரண்டு நாட்கள்

கர்த்தருடைய பெரிய கிருபையினால் இந்த வருட குடும்ப கூடுகையை தேவன் ஆசீர்வதித்தார். குடும்பமாய் குதூகலிக்கவும், குழுவாய் துதிக்கவும், ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை பகிர்ந்து கொள்ளவும், தேவபெலன் கொண்டு பெற்ற சாதனைகளுக்காய் அவருக்கு மகிமையை செலுத்தவும் தேவன் உதவினார்.

### ஆராதனை வேளை:

சகல ஜனங்களே, கைகொட்டி, தேவனுக்கு முன்பாகக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள். சங்கீதம் 47:1

ஆர்ப்பாட்டமில்லா விதத்தில், அர்ப்பணமுள்ள வகையில், வியப்பான முறையில் விண்ணவரை உயர்த்த இரு நாட்களும் உதவினார்.






### செய்தி வேளை
### தலைவனின் உக்கிராணத்துவம்:

தலைசிறந்த தலைவனாம் இயேசுவின் வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியதான பணிவையும், ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க வேண்டும் என்றதான புரிதலையும் அழகும், அற்புதமுமான முறையில் எளிய நடையில் ஆயத்தமாக்கப்பட்டோம்

### சிலுவை சுமப்போர்: Carrying the Cross is not wearing the cross.

சிலுவையை அணிபவர்களாய் அல்ல, சுமப்பவர்களாய் தேவனை அடிபிறழாமல் பின்பற்றி வாழவும், கிறிஸ்துவின் தியாகமுள்ள வாழ்வை திரும்பி பார்த்து, சிலுவையை சுமக்க முழுமையாய் அர்ப்பணிக்கவும் உந்தி தள்ளப்பட்டோம்.






### Recipe for Revival:

வித்தியாசமான தலைப்பில் ஆரம்பித்து, மாயையைப் பாராமல், தீங்கானதை கண்முன் வைக்காமல், எழுப்புதலுக்குண்டான சூத்திரங்களான வசனங்களை கற்றுக்கொண்டு, உயிர்மீட்சியடைய உணர்த்தப்பட்டோம்.

### Tech - To Exalt Christ

தலைமுறைகள் பற்றிய புரிதலையும், கரிசனையையும், முக்கியத்துவத்துவத்தையும், தலைமுறைகளுக்கு கிறிஸ்துவை கொண்டு செல்லுதலின் அவசியத்தை பற்றியும் அறிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் தேவன் நமக்கு தந்த தொழில்நுட்பத்தை எப்படி தேவ நாம மகிமைக்காக பயன்படுத்துவது என்பதைப்பற்றியும் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை பற்றியும் எச்சரிக்கப்பட்டோம்.






தேவனுடைய வார்த்தையானது வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானதாக மிகவும் பசியுடன் விரும்பப்படவேண்டும், கேட்கும்போதே சுவைக்கப்பட வேண்டும், புரிந்து கொள்ளப்பட்டு அசைபோடப்பட வேண்டும், மற்றும் விசுவாசத்தினால் உடலில் நன்றாக உள்வாங்கிக் கொள்ளப்பட வேண்டும். - தெர்த்துல்லியன்



### வாழ்வளிக்கும் வார்த்தைகள்:

நம் கையில் கிடைக்கப்பெற்ற வேதாகமத்தின் மேன்மையை உணர்ந்து, பொக்கிஷமாய் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் அறிந்து தெளிவடைந்தோம்.

### மனநலம் & குடும்ப நலம்:-

இருதயத்தில் மறைந்திருக்கும் மாறா காயங்களுக்கு மருந்தும், வயது உயர உயர நம் முக்கியத்துவமும் நம் பொறுப்பும் உயருகிறது என்ற நிஜத்தை உணரவும், நிழலானவைகளை நிறம் கண்டு தேவையற்ற சிந்தனைகள், செயல்களிலிருந்து விடுபடவும் கர்த்தர் உதவினார்.

கர்த்தர் தனித்துவமாய் நம்மை படைத்திருந்தாலும் குடும்ப அமைப்பையே ஸ்தாபித்தார். பக்தியுள்ள சந்ததியை எழுப்புவதற்குமுன், கணவன் மனைவியாய் எப்படிப்பட்ட புரிதலோடும், அன்போடும் செயல்பட வேண்டும் என்றும், கசப்பான வேர்களை பிடுங்கி எறிந்து உற்ற துணையாய் எப்படி வாழ வேண்டும் என்பதையும் உணர்த்தி சரிபடுத்தினார் .






### செயலாக்க சிந்தனைகள்:

இதுவரை நடந்தது, இப்போது நிலுவையில் உள்ள பணிகள், இனிமேல் நாம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் என்ற மூன்று காலத்தையும் குறித்ததான ஆக்கப்பூர்வமான கலந்துரையாடல் பகுதி அருமையிலும் அருமை.

### சந்தியா நேரம்:

குழந்தைகளுடன் அமர்ந்து, குழந்தைகளாய் மாறி குதூகலித்த தருணம், நேரம் பார்க்க நேரம் அமையாமல் நேயத்தை காட்டின நேரங்கள், சுய அறிமுகம், குடும்ப அறிமுகம், ஊழிய அறிமுகம், கலந்துரையாடல்கள் மற்றும் குழு விளையாட்டு செயல்பாடுகள் நிறைந்த மகத்தான நேரம்.





### நிழலில் எடுத்த நிழற்படங்கள்:

அழகிய தருணங்களை உள்ளடக்கிய நிழற்படங்களுக்கு பின்னால் வழிந்தோடும் அன்பும் அரவணைப்பும், குடும்ப உறவின் அச்சாணியான நம்பிக்கையையும், ஒற்றுமையையும் கண்டது மகிழச்செய்தது.

### சுவை நிறைந்த விருந்து:

கூட்டத்தில் எங்களுக்கு அளிக்கப்பட்ட விருந்தோம்பலும், சுவைமிகுந்த உணவுகளும் எங்கள் மனதை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது. அறுசுவை உணவோடு எட்டாத ஏழாம் சுவை அன்புச் சுவையோடு பரிமாறப்பட்ட உணவுகளில், பசியை அடக்கும் திருப்தியோடு சேர்ந்து, இதயத்தை நெகிழச் செய்யும் இனிய நினைவுகளையும் எங்களுக்கு தந்துவிட்டது.



**“மொத்தத்தில் ஆவி ஆத்துமா சரீரத்திற்கு தேவையான மறுமலர்ச்சியை ஏற்படுத்தின கூட்டம்”**

**பரிசுத்த வேதாகமமானது புற்றுநோய்களுக்கெல்லாம் கொடிய புற்றுநோய் இன்னதென்பதைக் கண்டறிந்து குணமாகுதல்களிலெல்லாம் சிறந்த குணமாகுதல் என்ன என்பதைப் பரிந்துரைக்கிறது. - ரே கம்ஃபர்ட்**

நமது GODependence செய்திமடல் பற்றிய சமீபத்திய கருத்துக்கணிப்பின் ஊக்கமளிக்கும் முடிவுகளைப் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். 34 நபர்களிடமிருந்து கிடைத்த கணிசமான பதில்கள், நமது வாசகர்களின் ஆழ்ந்த ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பைக் காட்டுவதுடன், இதன் உள்ளடக்கம் ஆவிக்குரிய வாழ்க்கையை அதிகம் பாதித்து பைபிள் வாசிப்புப் பழக்கங்களை ஊக்குவிப்பதை உறுதிப்படுத்துகின்றன. மதிப்புமிக்க கருத்துகளைத் தெரிவிப்பதற்காக தங்களின் நேரத்தை ஒதுக்கியதற்கு நன்றி.

## ஈடுபாடு மற்றும் தாக்கம் குறித்த முக்கிய குறிப்புகள்

**இந்த கருத்துக்கணிப்பு, வாசகர்களின் அதிக அளவிலான வாசிப்பு, ஆழ்ந்த ஈடுபாடு மற்றும் ஒட்டுமொத்த திருப்தியை வெளிப்படுத்தியது:**

- **தொடர்ச்சியான வாசிப்பு:** வாசகர்களில் பெரும்பான்மையானோர், *61.8%*, GODependence செய்திமடலை ஒவ்வொரு மாதமும் வாசிப்பதாக தெரிவித்துள்ளனர்.

- **ஆழ்ந்த ஈடுபாடு:** வாசகர்கள் இதன் உள்ளடக்கத்தில் கணிசமான நேரத்தை செலவிடுகிறார்கள். *பாதிக்கும் மேற்பட்டோர் (52.9%)* ஒவ்வொரு இதழையும் வாசிக்க 15 நிமிடங்களுக்கும் மேலாக செலவிடுகிறார்கள், மேலும் 26.5% பேர் 10-15 நிமிடங்கள் செலவிடுகிறார்கள். இது செய்திமடல் வெறுமனே விரைவாக படிக்கப்படாமல், முழுமையாக உள்வாங்கப்படுவதை இது காட்டுகிறது.

- **அதிக உதவியான தரமதிப்பீடு:** செய்திமடலின் ஆவிக்குரிய தாக்கம் தெளிவாகிறது: *85.3%* பதிலளித்தவர்கள், தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சி அல்லது வேதவாசிப்புப் பழக்கங்களில் செய்திமடலை *"மிகவும் உதவியாக"* இருப்பதாக காண்கிறார்கள். ஒட்டுமொத்தமாக, 94.1% பேர் செய்திமடலை "மிகவும் உதவியாக" அல்லது "ஓரளவுக்கு உதவியாக" இருப்பதாக மதிப்பிட்டுள்ளனர்.

- **கலைநயமான வடிவமைப்பு:** இதன் தளவமைப்பு மற்றும் வடிவமைப்பு அதிகம் பாராட்டப்பட்டுள்ளது. *91.2%* பேர் செய்திமடலை "மிகவும் கவர்ச்சியாக" (44.1%) அல்லது " எளிமையாக ஆனால் நன்றாக " (47.1%) எனக் கூறியுள்ளனர்.

- **ஆசீர்வாதத்தைப் பகிர்தல்:** செய்திமடல் சுறுசுறுப்பாக பகிரப்படுகிறது! *70.5%* பதிலளித்தவர்கள் செய்திமடலை அவ்வப்போது (52.9%) அல்லது ஒழுங்காக (17.6%) பகிர்கிறார்கள்.

- **எதிர்கால பங்களிப்புகள்:** பல வாசகர்கள் செய்திமடலில் பங்களிக்க ஆர்வம் தெரிவித்தனர். *58.8%* பேர் உள்ளடக்கத்தில் பங்களிக்க விரும்புவதாகக் கூறினர்; 20.6% பேர் ஆம் என்றனர், 38.2% பேர் ஒருவேளை, வரும் நாட்களில் இருக்கலாம் என்றனர்.

## எந்த உள்ளடக்கம் அதிக இணைப்பை ஏற்படுத்துகிறது?

**எந்தப் பிரிவுகள் மிகவும் பாராட்டப்படுகின்றன மற்றும் அதிகம் ஈடுபாட்டை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றிய பின்னூட்டம் உறுதிப்படுத்தப்பட்டது. அதிகம் விரும்பப்பட்ட முதல் ஆறு பிரிவுகள்:**

1. **வேதவாசிப்பு சவால் குறித்த தகவல்கள்** (அதிக ஈடுபாடு).
2. **வேத கதாபாத்திரங்களிலிருந்து பாடங்கள்**
3. **சாட்சிகள்**
4. **விளையாடுவோம் வேதாகம விளையாட்டு / வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்** (பதில்களை எழுதுவதற்கு வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்களை print எடுத்து பயன்படுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது).
5. **துதி & ஜெபக் குறிப்புக்கள்**
6. **கட்டுரைகள் / தியானங்கள்**

## தனிப்பட்ட தாக்கம் மற்றும் ஊக்கம்

குறிப்பிட்ட உள்ளடக்கம் தனிப்பட்ட முறையில் எவ்வாறு தங்களை பாதித்துள்ளது என பல வாசகர்கள் பகிர்ந்து கொண்டனர். அதில் *சாட்சிகள்* ஊக்கமளிப்பதாக அடிக்கடி குறிப்பிடப்பட்டன. சாட்சிகள் மற்றும் உற்சாகமான *ஜெபக் குறிப்புகள்* அவர்களை ஊக்குவித்து, மற்றவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி அறிய உதவியுள்ளதாக வாசகர்கள் குறிப்பிட்டனர். ஒரு வாசகர், தங்கள் வேத வாசிப்பை முதல் முறையாக முடிக்கும் நிலைக்கு வரும் மகிழ்ச்சியைக் குறிப்பாகக் குறிப்பிட்டு, இந்த முன்னேற்றத்தில் ஒரு பகுதியாக செய்திமடலின் ஆதரவு பங்களித்ததாக தெரிவித்தார்.

## முன்னோக்கிப் பார்த்தல்: மேம்பாட்டுக்கான பரிந்துரைகள்

எதிர்கால இதழ்களுக்கான உங்களின் பரிந்துரைகளை நாங்கள் மதிக்கிறோம். தற்போதைய வடிவம் "சரியானது" அல்லது "மிகவும் நல்லது" என பலர் கூறியபோதிலும், முக்கிய பரிந்துரைகளில் பின்வருவன அடங்கும்:

- படங்களின் தெளிவை மேம்படுத்துதல்.
- தொழில்சார்ந்த வடிவமைப்பாளர்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு.
- உள்ளடக்கம் சுருக்கமாக இருப்பதை உறுதிசெய்தல்.
- **மிஷனரி சுயசரிதைகள், நிறைவேறிய ஜெபங்கள்** குறித்த கட்டுரைகள், விரிவான வேதபாடத் தலைப்புகள், **குறுஞ்செய்திகள்**, மற்றும் குறிப்பாக **இளைஞர்கள்/மாணவர்களை** ஊக்குவிக்க கவனம் செலுத்தும் உள்ளடக்கம் போன்ற புதிய அம்சங்களுக்கான கோரிக்கைகள்.

GODependence செய்திமடலில் நீங்கள் தற்போது அனுபவிக்கும் பல்வகையான, நுண்ணறிவுள்ள மற்றும் கவர்ச்சிகரமான உள்ளடக்கத்தை பராமரிக்கும் அதே நேரத்தில், உங்களுக்கு சிறப்பாக சேவை செய்யும் வித்தில் இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்த ஆசிரியர் குழு உறுதிபூண்டுள்ளது. தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!



பரிசுத்த வேதாகமம் புரிந்துகொள்வது கடினமானது அல்ல. அதனை உள்வாங்கிக் (உட்)கொள்வதுதான் கடினம். - ஸ்டீவ் லாசன்

1




## சர்வதேச வேதவாசிப்பு தினம் - 16 டிசம்பர்

## 12 மணி நேர தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி

சர்வதேச வேதவாசிப்பு தினம் - 16 டிசம்பர் ஐ முன்னிட்டு தமிழில் 12 மணி நேர தொடர் வேதவாசிப்பு நிகழ்ச்சி 02 அக்டோபர் 2025 வியாழன் அன்று இந்திய நேரம் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகிறது.

உங்களுக்கு ஆர்வமும், நல்ல இணைய இணைப்பும் இருந்தால், நீங்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கலாம்.

2

## GODependence கருத்தரங்கு - செப்டெம்பர் 2025



செப்டெம்பர் 2025 மாதத்திற்கான GODependence கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட முடியவில்லை.

இது வரும் அக்டோபர் 2025 மாதத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

3

## வேத தியான குழுக்கள் (BMG) - அக்டோபர் 2025 முதல்

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், நாம் மீண்டும் தொடங்க திட்டமிட்டிருந்த வேத தியானக் குழுக்கள் (BMG) அக்டோபர் 2025 இரண்டாம் வாரத்தில் தொடங்கும்.

இதற்கான பயிற்சி குறித்த அறிவிப்புகள் மற்றும் விவரங்கள் அக்டோபர் 2025 முதல் வாரத்தில் வேதவாசிப்பு சவால் குழுக்களுக்கு அனுப்பப்படும்.



FOLLOW US!
GODependence வேதவாசிப்பு சவால்கள்
+965 6596 2559
GODependence - தமிழ்
GODependence - தமிழ்
GODependence - தமிழ்
GODependence
X GODependence

தொடர்பு முகவரி:
**GODependence**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

**உங்கள் சிந்தனைகளைக் குறைவாகவும், (வேதாகமத்தில் உள்ள) தேவனுடைய சிந்தனைகளை மிக அதிகமாகவும் செவிமடுத்துக் கேளுங்கள்.**

**- பிரன்கோயிஸ் ஃபெனிலன்**